பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 04 | ஞாயிற்றுக்கிழமை | 21.12.2025 | அதிர்வு 143

## 2 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை!



கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

07



# பேரிடரிலிருந்து இலங்கையை மீட்க இந்தியா வழங்கும் பேருதவித் திட்டம்

## கொழும்பில் ஜெய்சங்கர் அறிவிப்பார்

புயல், வெள்ளம், மண்சரிவு போன்ற பேரிடர்களில் சிக்கி அல்லாடும் இலங்கையை அந்த நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் பேருதவித் திட்டம் ஒன்றை இந்தியா வழங்குவதற்கு முன்வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. நாளை திங்கட்கிழமை கொழும்பு வந்து சேரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இந்தியாவின் பேருதவித் திட்டத்தை கொழும்பில் வைத்து அறிவிப்பார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டன.

07

# காட்டிக் கொடுக்கும் பரவணி பண்பியல்பின் தொடர்ச்சியே முன்னணியின் தமிழக விஜயம்

## ஈ.பி.டி.பியின் பேச்சாளர் ஸ்ரீகாந்த் சாட்டை




(எஸ்.நிதர்ஷன்)

தனிநாடே இறுதி இலக்கு என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழக முதலமைச்சரிடம் தெரிவித்திருப்பதன் உள்நோக்கத்தை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஈ.பி.டி.பி. வலியுறுத்தியுள்ளது.

மேலும், இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தில் உண்மைகளை எடுத்துரைத்து எமது கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அவலங்களுக்குத் தீர்வு காண முயலாமல், உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டமைக்குக் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்

06




'செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் தலை மீது' என்பார்கள். எல்லாப் பழியையும் குற்றங்களையும் செட்டியார் மீது சுமத்துவதாக இந்த வாசகத்தின் அர்த்தம் அமையும்.

சில சமயங்களில் அரசியல்வாதிகள் தங்கள் பிழைகள், பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக செட்டியார் தலை போல பத்திரிகையாளர்களைப் பயன்படுத்தி விடுவதும் உண்டு. அத்தகைய பல அனுபவங்களை நான் சந்தித்து வந்திருக்கிறேன். அரசியல்வாதிகள் தங்கள் பிழையை சமாளிப்பதற்கு செய்தி வெளியிட்ட ஊடகம் மீதோ, ஊடகவியலாளர் மீதோ அவ்வாறு குற்றத்தைச் சுமத்தி தப்பி விட எத்தனிப்பார்கள்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மட்டக் கூட்டம் நேற்று நடைபெற்றதாக முதல் தகவல் கிடைத்திருக்கின்றது.

அண்மைக் காலமாக அரசமைப்பு கவுன்ஸில் பிரதிநிதியாக கவுன்ஸில் கூட்டங்களில் பங்குபற்றும் இலங்கைத் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

06





இனியாவது கேலி செய்வதை நிறுத்திவிட்டு செயலில் வேலையைக் காட்டுங்கள்

# நாட்டுக்கு நல்லது நடந்தால் நாமும் ஆதரவைத் தருவோம்

## அநுர அரசுக்கு சஜித் உபதேசம்

"கடந்த காலங்களில், செல்வந்தர்களை தொடர்பு கொண்டு வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளை மேம்படுத்த முடியும் என திட்ட யோசனைகளை முன்வைத்து நடைமுறைப்படுத்தி வந்த சமயம், தேர்தல் காலத்தில் இதனை கேலிக்கு எடுத்த தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இன்று இந்தத் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் கூறிய விடயங்களைப் பார்த்து இவர்கள் கேலி செய்தாலும், கருத்துக்களை விமர்சித்த அரசாங்கம், அன்று விமர்சனங்களை முன்வைத்த எமது எண்ணக் கருக்களை இன்று அரசின் தேசியக் கொள்கையாக நாடாளுமன்றத்திலேயே வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கின்றது. உண்மை வெல்லும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கேகாலை மாவட்டம், அரநாயக்க பிரதேச மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில், ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ் அரநாயக்க பிரதேச வைத்தியசாலைக்கு ரூபா. 29 இலட்சம் மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்கள் நேற்று நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இடம்பெயர்ந்துள்ள மற்றும் வீடற்றிருக்கும் சகல மக்களுக்கும் பாதுகாப்பான காணிகளில் வீடுகளைக் கட்டுவதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பற்ற இடத்தில் குடியேறியவர்கள் பாதுகாப்பின்மை காரணமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆகையால், பாதுகாப்பான இடத்தில், காணியில் நல்ல வீடுகளை கட்டி, தங்கள் வீட்டிலிருந்தே வாழ்க்கையை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். இவை அனைத்தும் ஒன்றிணைந்த அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும். கல்வி, சுகாதார வசதிகள் மற்றும் மக்களின் வாழ்க்கை உள்ளிட்ட ஒரு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஊடாக இவை ஒருசேர நடக்க வேண்டும்.

யாரும் டித்வா சூறாவளியைக் கேலிக்கையான ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்தக் கேலிக்கையான பார்வைகளால் தான், சுனாமியிலிருந்து கூட எம்மால் பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியாது போனது. இன்றும் கூட டாப்ளர் ரேடார் அமைப்புகளை நிறுவிக்கொள்ள முடியாமல்தானே போயுள்ளன. டித்வா புயல் போன்ற இயற்கை பேரழிவுகளை நாம் தொடர்ந்து சந்திக்க இதுவே காரணமாகின்றது. இவற்றை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. உயிரிழப்புகள் தொடர்பில் நாம் ஒருபோதும் மகிழ்ச்சியடையப்போவதில்லை.

முகாமைத்துவச் செயற்பாட்டில் குழப்பம் இருப்பது கவலையான விடயமாகும். கட்டட ஆராய்ச்சி நிறுவனம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஆபத்தானவை என்று அறிவிக்கும்போது, அரசாங்கமானது மக்களை இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டு வந்து, பின்னர் அந்த ஆபத்தான பகுதிகளுக்கே திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளைச் செய்து வருகின்றன. இவை அபத்தமான விடயங்களாகும். அதிக ஆபத்துள்ள பகுதிகளுக்கு மக்களை அனுப்புவதன் மூலம் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். உயிரிழப்புகளுக்கு இனியும் இடமளிக்க முடியாது.

மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் முகமாக ரூ. 500 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடுக்கு ஆதரவு வழங்கினோம். எனவே இந்த நிவாரணங்களை உடனடியாக மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிவாரணங்களை வழங்கும் நடவடிக்களைகள் சரியான முறையிலும் வெளிப்படைத் தன்மையுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும். தயவுசெய்து முரண்பாடான அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்த்து, அரச அதிகாரிகளை சிக்கலில் சிக்க வைக்காமல் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுங்கள். அவ்வாறே மக்கள் மத்தியில் கோபத்தை தூண்டிவிடும் கருத்துக்களை முன்வைக்க வேண்டாம் என்றும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன்.

நிவாரணத் திட்டமாக ஐக்கிய மக்கள் வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு உதவிகளைச் செய்து வருகின்றது. இந்தப் பேரழிவை நாட்டுக்கு சௌபாக்கியத்தைக் கொண்டுவர பயன்படுத்த வேண்டும் என்றே நான் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றேன். சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்டி, உலகின் அனுதாபங்களைப் பெறுவதன் மூலம், நாடு முன்பு இருந்ததை விட குறிப்பிட்ட அபிவிருத்தியை எட்டும். அரசாங்கம் இதனை நடத்தாமல் இருக்க முயற்சிக்கின்றதா என்று எனக்குத் தெரியாது. நாட்டுக்காக நாம் சரியானதை சரியான நேரத்தில் செய்ய வேண்டும். இந்த நன்கொடையாளர் மாநாட்டை நடத்தும் பட்சத்தில், கட்சி வேறுபாடுகள் இல்லாமல் முழுமையான ஆதரவைத் தருவோம்." – என்றார்.







# மக்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பது பற்றி ஜனாதிபதியின் தலைமையில் நேற்று ஆராய்வு





“ரீபில்டிங் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப மாவட்ட அளவில் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் அதன்போது எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், நீர் வழங்கல், மீன்பிடி, போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் ஆகிய துறைகளைச் சேர்ந்த அமைச்சுகளின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அனைத்து மாவட்ட செயலாளர்களின் பங்கேற்புடன் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

வீடுகளைச் சுத்தம் செய்வதற்கு அரசாங்கம் வழங்கும் 25,000 ரூபா, வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்கு வழங்கும் 50,000 ரூபா ஆகிய உதவித்தொகைகளை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இங்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

மேலும், வீடுகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குதல், நாடு பூராகவும் பராமரிக்கப்படும் பாதுகாப்பு மையங்களின் செயற்பாடுகள், மக்களை மீளக் குடியமர்த்தல், வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அதன் முன்னேற்றம் ஆகியவை இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

இழப்பீடு வழங்கும் செயற்பாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்தப் பணிகளைச் செயற்றிறனுடன் முன்னெடுக்கவும் எவரையும் கைவிடாத வகையில் இழப்பீடு பெற உரிமை உள்ள அனைவருக்கும் அதனை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், மக்களை மீள்குடியேற்றுவது மற்றும் அதற்குத் தேவையான காணிகளை அடையாளம் காண்பது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், பிரதான மாவட்டங்களில் செயற்படுத்தப்பட வேண்டிய வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் தனியான திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அனைத்து தரப்பினரின் பங்களிப்புடன் இது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடல் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இருந்து மக்களை உடனடியாக வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்ற வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வீட்டுச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும்போது அத்தகைய நடவடிக்கைகளை நியாயமானதாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

பெரும் போகத்துக்கு விவசாயிகளைத் தயார்படுத்துவதற்காக நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் புனரமைப்பு, இழப்பீடு மற்றும் விதை நெல் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டங்களின் செயற்பாட்டையும் இதன்போது ஜனாதிபதி கேட்டறிந்தார்.

மேலும், சேதமடைந்த கால்நடை பண்ணைகளுக்கு இழப்பீடு வழங்கி, அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்குதல், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறு வர்த்தகங்களை மீண்டும் ஆரம்பிக்க உதவுதல், மீன்பிடித் தொழிலை மீட்டெடுப்பது மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக அரசு வழங்கும் 15,000 ரூபா உதவித்தொகையை உடனடியாக வழங்கி நிறைவு செய்தல் போன்ற வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சேதமடைந்த கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை மீண்டும் வழங்குவதற்கான வேலைத்திட்டம் குறித்தும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

# அதீத உயர்வை எட்டிய காய்கறிகளின் விலை

இலங்கையின் சில பகுதிகளில் தாழ்நில காய்கறிகளின் விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதீத உயர்வை எட்டியுள்ள சந்தை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புறக்கோட்டை பொருளாதார மையத்தில் ஒரு கிலோ கத்தரிக்காயின் சில்லறை விலை 800 ரூபாவை நெருங்கி உளளது.

மேலும் பச்சை மிளகாயின் விலை 1,000 ரூபாயைத் தாண்டியுள்ளதோடு, தக்காளி விலை 600 ரூபாயை தாண்டியுள்ளது.

ப்ரோக்கோலி 1,000 ரூபாயைத் தாண்டியுள்ளது.

இந்தத் தரவுகள் அனைத்தும் மத்திய வங்கியின் அன்றாட விலைப்பட்டியல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.



நுகர்வோர் சந்தையில் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் விலை ஏற்றம் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

# கட்சியின் கொள்கைகளில் இருந்து திசைமாறிப் பயணிக்கும் ஜே.வி.பி.

## விமல் வீரவன்ச பகிரங்கக் குற்றச்சாட்டு



மக்கள் விடுதலை முன்னணியானது (ஜே.வி.பி.) அதன் ஆரம்பகால கொள்கைகளில் இருந்து தற்போது திசைமாறிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பி. ஊடாகவே தனது அரசியல் பயணத்தை விமல் வீரவன்ச ஆரம்பித்தார்.

எனினும், அவரின் சர்ச்சைக்குரிய நடவடிக்கை காரணமாக அவரைக் கட்சியைவிட்டுவெளியேற்றும்முடிவைஜே.வி.பி. எடுத்திருந்தது. அதற்கு முன்னதாகவே அவர் பதவி விலகி, தேசிய சுதந்திர முன்னணி எனும் புதிய கட்சியை ஆரம்பித்தார்.

அத்துடன், மஹிந்த அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சு பதவிகளையும் பெற்றுக்கொண்டார். கடந்த பொதுத்தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி மலர்ந்த பின்னர் ஜே.வி.பி. மீது விமல் வீரவன்ச கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் கூறியவை வருமாறு:-

"நான் இருந்த காலத்தில் இருந்த ஜே.வி.பி. அல்ல தற்போது காணப்படுகின்ற கட்சி. செயல் என்பதைவிட வாய் சொல் வீரர்களாகவே அந்தக் கட்சியினர் செயற்படுகின்றனர்.

அதுமட்டுமல்ல இந்தியா மற்றும் அமெரிக்காவுக்குச் சார்பாகச் செயற்படும் நிலைமையே காணப்படுகின்றது. தெளிவானதொரு கொள்கையும் அந்தக் கட்சியினரிடம் இல்லை.

கட்சித் தலைமையகத்தில் புரட்சியாளர்களின் படங்களை மட்டும் வைத்துக் கொண்டு, அவர்களின் கொள்கைளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் பயணித்துக்கொண்டிருக்கின்றனர்." - என்றார்.

# மதத் தலங்களுக்கு பலத்த பாதுகாப்பு பொலிஸாரின் புதிய திட்டம் அறிவிப்பு



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் வழிபாட்டுத் தலங்களுக்காக விசேட பாதுகாப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக பெருமளவான மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், காவல்துறை அத்தியட்சகர் எப். யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பண்டிகைக் காலத்தில் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பல்வேறு மத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்காக சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்களும், புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பண்டிகைக் காலத்தை பாதுகாப்பான முறையில் செலவிடுவதற்கு விசேட திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், அனைத்து தலைமை பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் நிலையப் பொறுப்பதிகாரிகள், அந்தந்த பொலிஸ் பிரிவுகளில் உள்ள அனைத்து மதத் தலங்களின் தலைவர்களை சந்திக்கவுள்ளனர்.

இதனையடுத்தே, அனைத்து மத நிகழ்ச்சிகளுக்கும் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# திறம்படச் செயலாற்ற முடியாவிட்டால் பதவிகளை விட்டு உடனே விலகுங்கள்!

## வடக்கு அதிகாரிகளுக்கு ஆளுநர் எச்சரிக்கை

“பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் துணிந்து, விரைந்து தீர்மானங்களை எடுக்க வேண்டும். சப்பைக்கட்டு காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. உங்களால் முடிவெடுக்கவோ, செயலாற்றவோ முடியாது என்றால் பதவிகளை விட்டுத் தாராளமாகச் செல்லலாம்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்குக் காட்டமாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவுகளை ஆராயும் விசேட கூட்டம் நேற்று சனிக்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய ஆளுநர், அதிகாரிகளின் மந்தமான செயற்பாடுகள் குறித்துத் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

“கடந்த ஓராண்டாக நான் பல விடயங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பேன் என எதிர்பார்க்க வேண்டாம். ஒரு தடவை சொன்னால் அதனைச் செய்து முடிக்க வேண்டும். உங்களது செயற்பாடுகளால் நான் விரக்தியடைந்திருக்கின்றேன். நான் எனது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்ற உங்களுக்கு எதையும் கூறவில்லை. இந்த மாகாணத்தின் கல்வியை மேம்படுத்தவே பணிப்புரைகளை வழங்குகின்றேன். ஒரு சாதாரண இடமாற்றத்தைக் கூடச் செய்ய முடியாது, நடவடிக்கை எடுக்க முடியாது என்றால் நீங்கள் ஏன் அந்தப் பதவிகளில் இருக்கிறீர்கள்?” – என்று ஆளுநர் கேள்வி எழுப்பினார்.

மேலும், “எல்லாவற்றுக்கும் மேலதிகாரிகளிடமே கேட்டுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, பொறுப்பான பதவியில் இருப்பவர்களுக்குத் துணிவு வேண்டும். அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இல்லாவிடின் பதவிகளை விட்டுச் செல்லுங்கள்.” – என்றும் அவர் வலியுறுத்தினார்.

கல்வித் துறையில் பழிவாங்கும் நோக்கோடு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைக் கடுமையாகச் சாடிய ஆளுநர், “இங்கே பழிவாங்குவதற்குத் தரும் முக்கியத்துவத்தை, பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்துங்கள். பிள்ளைகள் கல்வியில் மேம்படுவதால் கிடைக்கும் மகிழ்ச்சி வேறு எதனாலும் வராது. அதற்குரிய திட்டங்களைத் தயாரியுங்கள். ஒவ்வொன்றையும் களத்துக்குச் சென்று ஆராயுங்கள்.” – என்று அறிவுறுத்தினார்.

அடுத்த ஆண்டுக்கான திட்டமிடல்கள் குறித்துப் பேசுகையில், அண்மையில் ஏற்பட்ட பேரிடர் பாதிப்புக்குள்ளான பகுதிகளின் தேவைகளுக்குக் கட்டாயம் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என ஆளுநர் உத்தரவிட்டார். அத்துடன், பின்தங்கிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி, அரைகுறையாக உள்ள கட்டடங்களைப் பூர்த்தி செய்தல் மற்றும் உண்மையான தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் 2026ஆம் ஆண்டுக்காகத் திணைக்கள ரீதியாகத் திட்டமிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

* கல்வித் திணைக்களம்: 1207 மில்லியன் ரூபா
* விளையாட்டுத் திணைக்களம்: 113 மில்லியன் ரூபா
* முன்பருவ பிள்ளை வளர்ச்சி: 75 மில்லியன் ரூபா
* கலாசாரத் திணைக்களம்: 38 மில்லியன் ரூபா

மேற்படி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்துத் துறைசார் பணிப்பாளர்கள் விளக்கமளித்தனர். வேறு நிதி மூலங்களிலிருந்து மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களை இந்த நிதியில் உள்ளடக்க வேண்டாம் எனவும், மாகாணத்துக்கான ஒருங்கிணைந்த திட்டத்தை எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் பணித்தார். தேவைப்பாடுகள் அதிகமாக உள்ளமையால் மேலதிக நிதியைக் கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள் (நிர்வாகம் மற்றும் திட்டமிடல்), மாகாணக் கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர், துறைசார் மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல சமயங்களில் இராணுவத் தரப்பினருக்கு ஆதரவாக கவுன்ஸிலில் செயற்பட்டு, வாக்களித்து வருகிறார் என்று எனது பத்தியில் சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் எப்போதும் – இதுவரையில் – அவர் அதனை மறுத்து எந்த கருத்தையும் எங்களுக்கு அனுப்பவில்லை.

ஆனால் இந்த விவகாரம் நேற்று கிளிநொச்சிக் கூட்டத்தில் அவரிடம் வினாவாக எழுப்பப்பட்ட போது எல்லா பழியையும் என் மீது போட்டு, நான் தவறாக செய்தி மற்றும் தகவல் வெளியிட்டேன் என என் மீது குற்றம் சுமத்தி அவர் தப்ப முயன்றார் என்றும், எனக்கு எதிராக இந்த விடயத்தை ஒட்டி அவர் சட்ட நடவடிக்கை எடுக்கப் போகின்றார் என்று கூட்டத்தில் தெரிவித்தார் என்றும் அறிய வந்தது.

கூட்டத்தின் முழு விவரமும் திரட்டிய பின்னர், விரிவான விளக்கமும் பதிலும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஆயினும் இவ்விவகாரத்தை ஒட்டி இதுவரை நான் எழுதிய செய்திகள் சரியானவை என்று மீண்டும் வலியுறுத்தித் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இவ் விவகாரத்தில் நீதிமன்றுக்கு செல்லும் துணிச்சல் அவருக்கு இருந்தால் அங்கு சந்திப்பதற்கும் காத்திருக்கிறேன்.

செய்தி தவறு என்றால் அதை மறுப்பதற்கு பின்னிற்பவன் அல்லன் நான். ஆனால் அரசியல்வாதிகள் தங்கள் தவறை மறைப்பதற்கு ஊடகவியலாளர்களை பலிக்கடாவாக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து.

கிளிநொச்சிக் கூட்டத்தின் முழு விவரத்தையும் திரட்டிய பின்னர், அது பற்றிய விவரங்களையும் விளக்கங்களையும் வாசகர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் சம்பந்தப்பட்டோருக்கு உரிய பதிலை வழங்க முடியும் என நினைக்கிறேன்.

* * *

‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!’ என்பார்கள்.

அந்த மாதிரி, தமக்கு வந்த கோபத்தை அடக்கத் தெரியாத யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கிராம சேவையாளர் ஒருவரை நையப்புடைக்கப் போய் இப்போது தேவையற்று அல்லல்படுகிறார்.

கிளிநொச்சியில் கடந்த 29 ஆம் திகதி பேரிடர் உச்சத்தில் இருந்த சமயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுக்கான இடைத்தங்கல் முகாமில் பராமரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த கிராம சேவையாளர் ஒருவருடன் முரண்பட்ட இளங்குமரன், அவருக்கு எதிராகக் கைநீட்டி விட்டார், மன்னிக்கவும், கால் நீட்டி விட்டார் என்று கூறப்படுகிறது. இளங்குமரன் எம்.பி. தம்மை காலால் எட்டி உதைந்தார் என்றுதான் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பொலிஸில் கொடுத்த முறைபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அடுத்து வேறு வழியின்றி குறைந்தபட்சம் நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்று காட்ட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்ட கிளிநொச்சி பொலிஸார், இந்த விடயம் குறித்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர். இந்த முறைப்பாடு தொடர்பில் இளங்குமரனைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த அடுத்த ஆண்டு செப்டம்பர் வரையும் அவர்கள் மன்றிடம் கால அவகாசம் கோரிப் பெற்றிருக்கிறார்கள்.

இதில் விடயம் என்னவென்றால் இளங்குமரனைக் கைது செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிடவில்லை. பொலிஸார்தான் அவரைக் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள்.

ஆக, இதுவரையில் இளங்குமரனைக் கைது செய்வது பற்றி நீதிமன்றம் எதுவும் கூறவில்லை. அவரைக் கைது செய்ய வேண்டும் என எழுத்தில் மன்றுக்குத் தெரிவித்திருப்பவர்கள் பொலிஸார்தான் என்று கூறப்படுகின்றது.

பொலிஸார் இவ்வாறு பத்து மாத காலம் கால அவகாசம் தேவை என்று வேண்டுமென்றே நீதிமன்றிடம் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள் எனப் பிற கிராம சேவையாளர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனிடம் முறைப்பாடு செய்தமையை அடுத்து, சுமந்திரன் நகர்த்தல் பத்திரம் ஒன்றை கிளிநொச்சி நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, இந்த விடயத்தைப் பரிசீலனைக்கு எடுக்கச் செய்து, அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பதிலாக வரும் ஜனவரி 16ஆம் திகதி இந்த விடயத்தை மன்றில் எடுக்க மன்று மூலம் உத்தரவு பிறப்பிக்க வைத்தார்.

சுமந்திரன் இந்த வழக்கில் நேரடியாக முன்னிலையாகின்றார் என்று அறிந்ததும் பதற்றப்பட்ட இளங்குமரன் அடுத்த நாளே தமது சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் இன்னொரு நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்திருக்கிறார்.

அந்த நகர்த்த பத்திரம் தொடர்பில் எந்த உத்தரவும் இல்லை என்று தெரிவித்துள்ள நீதிவான், பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி, வாக்குமூலம் அளித்த பின்னர் ஜனவரி 16ஆம் திகதி மன்றில் தோற்றுமாறு கூறி அந்த நகர்த்தல் பத்திரத்தை முடிவுறுத்தி விட்டார்.

நீதிமன்றத்தின் உத்தரவுப்படி பொலிஸ் நிலையத்திற்குப் போனால், பொலிஸார் ஏற்கனவே நீதிமன்றத்தில் தெரிவித்தபடி தம்மைக் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துவார்கள் என்ற பயம் இளங்குமரனை தொற்றிக் கொண்டது போலும்.

எது, எப்படியானாலும் இவ்விவகாரம் பிணையில் விடப்படும் குற்றம்தான். ஆகவே கைது செய்யப்பட்டாலும் ஒரு சில மணி நேரத்துக்குள் பிணையில் வெளியே வந்து விடலாம். ஆயினும் இந்த விடயத்தை ஒட்டிக் கைது செய்யப்படுவது தமக்கு இழுக்கு என்று கருதியோ, என்னவோ இந்த விடயத்தில் முன்பிணை கோரி இன்னொரு நகர்த்தல் பத்திரத்தை இளங்குமரன் சார்பில் சமர்ப்பிப்பதற்கு சட்ட வட்டாரங்கள் தயாராகி வருகின்றன என ஒரு தகவல் கிடைத்தது.

டிசம்பர் மாத இறுதியில் நீதிமன்றம் விடுமுறையில் இருந்தாலும் இது போன்ற நகர்த்தல் பத்திரங்கள் மன்றில் எடுக்கப்படும் சாத்தியம் உண்டு.

ஏற்கனவே இந்த விடயத்தில் அவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட நகர்த்தல் பத்திரம் தொடர்பில் எந்த உத்தரவுமே இல்லை என்று மன்று குறிப்பிட்ட நிலையில், இன்னொரு முன் பிணை மனு சமர்ப்பிக்கப்பட்டால் அதை நீதிமன்றம் எப்படிக் கையாளும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இளங்குமரன் திட்டமிட்டபடி முன்பிணை மனு தாக்கல் செய்வாரா? அவருக்கு முன்பிணை கிடைக்குமா? – போன்றவற்றை எல்லாம் இனிமேல்தான் பார்த்திருக்க வேண்டும்.

## காட்டிக் கொடுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்த் பன்னீர்செல்வம் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று அடையாளப்படுத்தி ஒரு தரப்பு இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு தமிழக முதல்வரையும் சந்தித்திருக்கின்றது.

தற்போதைய பிராந்திய அரசியல் சூழலில் இவர்கள் கேட்டுக்கொண்டமை போல் தமிழக அரசியல் தரப்புக்களினால் மத்திய அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க முடியுமா?

தற்போதைய பூகோள அரசியல் சூழலில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை சார்ந்த விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பதெல்லாம் மிகவும் ஆழமாக பேசப்பட வேண்டிய விடயங்கள் என்பது ஒருபுறமிருக்க – இலங்கையின் வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற 6 தலைவர்கள் வந்திருக்கின்றோம் என்ற பீடிகையுடன் சென்றிருக்கின்ற தமிழ்த் தேசிய மககள் முன்னணியினர் அங்கு வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பாக எமது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டி இருக்கின்றது.

அண்மையில், தமிழக முதலமைச்சரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவித்தகஜேந்திரகுமார்பொன்னம்பலம் அணியினர், தமிழகக் கடற்றொழிலாளர்களுக்கும், இலங்கையின் வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்களுககும் இடையில் பாரிய பிரச்சினை இருப்பதாகவும், அதில் தமிழக முதலமைச்சர் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால், இரண்டு தரப்பு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் பரஸ்பர முரண்பாடு இல்லை. இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகளே பிரச்சினைக்கு மூலகாரணமாக இருக்கின்ற நிலையில், உண்மைகளை எடுத்துக்கூறி, எமது கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினையை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை தமிழகத் தலைவர்களிடம் வலியுறுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவறியுள்ளதுடன், பிரச்சினையின் தீவிரத்தையும் திட்டமிட்டு மறைத்து, திசைதிருப்பி இருக்கின்றனர்.” – என்று ஸ்ரீகாந்த் பன்னீர்செல்வம் குற்றம் சுமத்தினார்.

அதேபோன்று, தனிநாட்டை உருவாக்குவதே இறுதி இலக்கு என்று தமிழக முதல்வரிடம் தமிழ்த் தேசிய மக்கள் எடுத்துரைத்துள்ளமை விடுதலை சிறுத்தைகளின் தலைவர் திருமாளவன் மூலம் வெளிப்படுத்தப்பட்டமையைச் சுட்டிக்காட்டியுள்ள ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்த், இதன் உள்நோக்கம் தொடர்பாக அந்தக் கட்சியினர் மக்களுக்குத் தெளிபடுத்த வேண்டும் எனவும், அதிகாரங்கள் கிடைத்தால் தனிநாட்டை உருவாக்கி விடுவார்கள் என்று 13ஆம் திருத்தச் சட்டத்தை வழங்காமல் தவிர்ப்பதற்கே காரணம் சொல்லப்படும் நிலையில், நடைமுறை யதார்த்தம் பற்றிய சிந்தனையற்ற – முட்டாள்தமான இந்தக் கருத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முயற்சிகளுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டினர். 07

## முல்லைத்தீவில் இருந்து

# வேலைக்கு யாழ்ப்பாணம் வந்த சிறுவன் வீட்டுச் சுவர் விழுந்து பரிதாப உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

வீட்டை இடித்துக்கொண்டிருந்த சிறுவன் சுவர் விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு – விசுவமடுவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் டிலக்சன் (வயது 17) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி சிறுவன் குடும்ப வறுமை காரணமாகவேலைக்குவந்து,நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம், குருநகர் – பாஷையூரில் பழைய வீட்டை இடித்துக்கொண்டிருந்தார். ஒரு பக்க சுவரினை இடித்துவிட்டு அந்தச் சுவர் விழப்போகின்றது என அறையின் உள்ளே ஓடினார். இதன்போது மற்றைய சுவர் அவர் மீது விழுந்ததில் சம்பவம் நடந்த இடத்திலேயேஉயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## காட்டிக் கொடுக்கும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி..)

மேலும், தமிழகம் சென்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வெளியிட்ட கருத்துக்களும் நிலைப்பாடுகளும் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களைக் காட்டி கொடுத்து வருகின்ற பொன்னம்பலம் குடும்பத்தினரின் பரவணிப் பண்பியல்பின்தொடர்ச்சியாகவே பார்க்க வேண்டி இருப்பதாகவும், ஈழத் தமிழர்களின் இருப்பையும் எதிர்காலத்தையும் கேள்விக்கு உட்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளரினால் இந்த ஊடகச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

## 2 மாவட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கையானது நேற்று மாலை முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் தொலுவ, உடுதும்பர, மினிப்பே,மெததும்பர ஆகிய பகுதிகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் மதுரட, நில்தண்டாஹின்ன, வலப்பனை, ஹங்குரன்கெத்த ஆகிய பகுதிகளுக்குமே மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

## பேரிடரிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கும் இலங்கையைப் பேரிடரின் பின் மீட்பதற்கான பெரும் உதவித் திட்டம் ஒன்றை இந்தியாவின் சார்பில் வழங்குவதற்குப் பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்திருக்கின்றார் என்றும், அதனைக் கொழும்பில் வைத்து அறிவிக்கவே அவரின் விசேட பிரதிநிதியாக இந்திய வெளி விவகார அமைச்சர் கொழும்பு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயங்கள் பற்றிய உத்தியோக பூர்வ அறிவித்தல் எதையும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்று மாலை வரை வெளியிடவில்லை.

ஆயினும் தனிப்பட்ட சில செய்தி வட்டாரங்கள் இந்தச் செய்திகளைக் கோடி காட்டின.

ஒரு நாள் விஜயமாக கொழும்பு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை கொழும்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒன்றாகச் சந்திக்க இருக்கின்றார் என்று தெரிகின்றது.

இலங்கை அரசின் தலைவர்களைத் தவிர, எதிர்க்கட்சிகள் தரப்பில் வேறு யார் யாரை இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் சந்திப்பார் என்பது பெரும்பாலும் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அண்மைய பேரிடரில் சிக்கிய உடனேயே விரைந்து நிவாரண உதவிகளையும், மீட்பு நடவடிக்கை வசதிகளையும் இந்தியா அனுப்பத் தொடங்கியது. அந்த உதவியை அது தொடர்ந்து வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் உடனடி மீட்பு நடவடிக்கைகள் இப்போது வரை இலங்கையில்தொடர்ந்து கொண்டிருப்பதும் கவனத்துக்குரியது.

## கொழும்பில் இன்று கலை திறன் போட்டிகள்

“கலாமித்ரா 2026“ விருது விழாவை முன்னிட்டு புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணி நடத்தும் மகளிருக்கான நடனப் போட்டி (குழு), மருதாணி அலங்காரம் மற்றும் சித்திரப்போட்டி என்பன இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் கொழும்பு–13 கொட்டாஞ் சேனை கெதிட்ரல் ஆண்கள் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படிபோட்டிகளில்கலந்துகொள்ள விண்ணப்பித்தவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை விண்ணப்பிக்காத பெண்கள்யாரேனும்விரும்பினால்நேரில்சமூகமளிக்குமாறும்கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களை அறிய 075 4880172 என்ற வட்சப் இலக்கத்தில் தொடர்புகொள்ளவும்.




## இவ்வருடம் 22 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை!

2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 17ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 22 இலட்சத்து 19 ஆயிரத்து 209 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பாரிய அனர்த்தத்தின் மத்தியிலும் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ளநிலையில்அவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து ஆயிரத்து 97 ஆகும்.

மேலும், ஜேர்மனியில் இருந்து ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 355 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவில் இருந்து ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 99 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்தில் இருந்து 2 இலட்சத்து 939 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவில் இருந்து ஒரு இலட்சத்து ஆயிரத்து 12 சுற்றுலாப் பயணிகளும், சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 553 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸில் இருந்து ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 802 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்

அத்துடன், டிசம்பர் மாதத்தின் முதல் 17 நாட்களில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 616 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இழுபடும் நியமனம்

நாட்டின் நிறைவேற்றதிகாரத்திற்கும் அரசமைப்பு கவுன்ஸிலுக்கும் இடையில் இணக்கத்துக்கு வர முடியாத உடன்பாடற்ற நிலைமை காரணமாக நாட்டில் மிக முக்கியமான கணக்காய்வாளர் நாயகம் பதவி கடந்த எட்டு மாதங்களுக்கு மேல் ஒரு நிரந்தர நியமனமின்றி தொடர்ந்து இழுபடுகின்றது.

நாட்டின் நிதி நடவடிக்கைகள், பொது வளங்களை நிர்வகித்தல், அரசு நிர்வாகத்திற்குள் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் நிதி நிலைமை விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்றுக்கு பதிலளிக்கும் பொறுப்பும் கடப்பாடும் கொண்ட ஒரு முதன்மைப் பதவி நிலை இவ்வாறு நிரப்பப்படாமல் நீண்ட காலம் இழுபடுவது மிக முக்கியமான பிரச்சினையகும்.

அதுவும் ஊழல், முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், மோசடிகள் இல்லாத அரச நிர்வாகம் ஒன்றைக் கட்டமைப்போம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்து, அதனையே தன்னுடைய ஆட்சி நிர்வாக மந்திரமாகத் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அதிகார பீடம், நாட்டில் ஒரு நிரந்தரமான கணக்காய்வாளர் நாயகம் பதவியை நிரப்பாமல் இவ்வளவு காலம் இழுபட வைத்துக்கொண்டு, அத்தகைய நீதி, நியாயமான, ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கப் போவதாகத் திரும்பத் திரும்ப உச்சாடனம் செய்வது அபத்தமன்றி வேறில்லை.

நாட்டின் பொருளாதார நலனையும், பொது நலன் நிலைமையையும் உறுதிப்படுத்தும் அதே சமயம், தொழிற்சார் நிபுணத்துவ சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் இந்தப் பதவி நியமனம் நிரப்பப்பட வேண்டும் என்று நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கம் சுட்டி காட்டி இருக்கின்றது.

அரசமைப்பின் விதிகளின்படி இப்பதவிக்கு ஜனாதிபதி சமர்ப்பித்த பரிந்துரைகளை அங்கீகரிக்கும் போது, சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு ஏற்ப, நாட்டின் கணக்காய்வுச் செயல்முறையின் சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில், பொருத்தமான நபரை அந்தப் பதவிக்கு நியமிக்க அரசமைப்பு கவுன்ஸில் பொறுப்புடையது.

இந்த விடயத்தில் இதுவரை இந்தப் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட நபர்களைப் பரிசீலிக்கும் போது, பொது நலனுக்கு முன்னுரிமை அளித்து பொறுப்புடன் செயல்பட்ட தற்போதைய அரசமைப்புக் கவுன்சில் பாராட்டுக்குரியது.

இந்தப் பதவி நியமனத்தின் போது- கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் புகழ்பெற்ற வரலாற்றையும், அடுத்தடுத்து கணக்காய்வாளர் நாயகங்களாக இருந்தோர் தங்கள் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் வெளிப்படுத்திய நீண்டகால அர்ப்பணிப்பையும் கருத்தில் கொண்டு, இதுவரை அடையப்பட்ட தேசிய பொறுப்புணர்வின் அளவைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடிய எந்தவொரு முயற்சியையும் தடுப்பது ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதப்பட வேண்டும். அதன்படி, காலியாக உள்ள இந்தப் பதவியை நிரப்புவதற்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் தெளிவான மற்றும் நிறுவப்பட்ட அளவுகோல்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மேலும், கணக்காய்வாளர் நாயகம் பதவி என்பது நிறைவேற்றதிகாரத்தின் அல்லது அரச நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் ஒன்றல்ல என்பதை வலியுறுத்துவது கட்டாயமாகும். மாறாக, அது மிக உயர்ந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பதவியாகும். நிர்வாக அதிகாரத்திலிருந்து சுயாதீனமாகச் செயல்படும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

எனவே, நாட்டின் நல்வாழ்விற்கும் நாட்டின் பொது நலனுக்கும் இன்றியமையாத பங்கான கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கான நியமனம் நிறுவனத்தின் கண்ணியம், சுதந்திரம் மற்றும் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தும் வகையில் செய்யப்படுவது மிக அவசியம்.













# பேரிடருக்கு மத்தியிலும் வடக்குக்கான நிதியை குறைக்கவில்லை ஜனாதிபதி

## சிறப்பான நிதி முகாமை என்கிறார் ஆளுநர்

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் எமது திட்டங்களுக்கான நிதியை குறைக்காது விடுவித்துள்ளமையானது, இந்த அரசாங்கத்தின் சிறப்பான நிதி முகாமைத்துவத்தை வெளிப்படுத்துகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பெண் தொழில்முனைவோருக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே இந்த அரசாங்கத்தின் பிரதான இலக்காகும். இதன் ஓர் அங்கமாகவே இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

மாகாணத்துக்குரிய நிதி ஒதுக்கீடுகளை உரிய நேரத்தில் விடுவித்து, அபிவிருத்திப் பணிகள் தடையின்றி நடைபெறுவதை அரசாங்கம் உறுதி செய்துள்ளது.

உதவிகளை வழங்குவதோடு எமது கடமை முடிந்துவிடுவதில்லை. இந்தத் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைகின்றனவா என்பதை அதிகாரிகள் தொடர்ச்சியாகக் கண்காணிப்பார்கள். வடக்கின் பல சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் தமது கடின உழைப்பால் உயர் நிலையை அடைந்துள்ளனர். அவர்களுக்கான சந்தை வாய்ப்புகளையும், ஏற்றுமதி வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு தற்போதைய நிலையில் குறைவாகவே உள்ளது. இத்தகைய வாழ்வாதார ஊக்குவிப்புத் திட்டங்கள் ஊடாக அந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, தேசிய பொருளாதாரத்தில் வடக்கின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய நாம் முயற்சித்து வருகின்றோம்." – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஊடாக உணவு உற்பத்தி, விவசாயம், சிறுகைத்தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபடும் 80 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முழு மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட்டன.

தொழிற்துறை திணைக்களத்தின் ஊடாக37தொழில்முயற்சியாளர்களுக்கு அரை மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் துறை கௌரவ அமைச்சர் இ.சந்திரசேகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் க.சிவகரன், சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசோதி, தொழிற்துறை திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி க.துஷியா, வடக்கு மாகாண பிரதம செயலக உதவிச் செயலர் திருமதி அனெற் நிந்துஸா அன்ரனி டினேஸ் மற்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.















# பாட்டாளி மக்கள் கட்சி தலைவரை சந்தித்த தமிழ்த் தேசியப் பேரவை!

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநரும் தலைவருமான மருத்துவர் எஸ்.ராமதாஸ்க்கும் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை திண்டிவனம் – தைலாபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி யாப்பு உருவாக்கப்பட குரல் கொடுக்க வேண்டியதன் அவசியம், ஏக்கிய இராச்சிய அரசமைப்பை நிராகரிப்பதற்கான அவசியம், ஈழத் தமிழ் கடற்தொழிலாளர் பிரச்சினை தீர்க்கப்படல் ஆகிய விடயங்கள் பேசப்பட்டன.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., பொன்னுத்துரை ஐங்கரநேசன், செல்வராசா கஜேந்திரன், தருமலிங்கம் சுரேஷ், கனகரட்ணம் சுகாஷ், நடராஜர் காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.








# கொழும்பு - திருமலை ரயில் சேவை மீண்டும் பகலில் நேற்றுத் தொடக்கம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை முதல் கொழும்பு வரையான ரயில் சேவை நீண்ட நாள்களின் பின் நேற்றுக் காலை 07.00 மணிக்குத் தொடங்கியது. திருகோணமலையில் தங்கியிருந்த ரயில் நேற்றுக் காலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலையில் பின் இந்த ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ரயிக் கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கி காலை 06.00 மணிக்கு புறப்படும்.

திருகோணமலை – கொழும்பு வரையான சேவை கடந்த மாதம் 27ம் திகதி முதல் சீரற்ற கால நிலையின் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்கது.

இருந்த போதிலும் திருகோணமலை – கொழும்புக்கான இரவு நேர சேவை இன்மையால் பாதிப்பு நிலை தொடர்கின்றது.

திருகோணமலை – கொழும்பு இடையேயான சேவையில் அதிக எண்ணிக்கையான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருவதுண்டு. முதலாம் தர குளிரூட்டப்பட்ட சேவையையின் ஊடாக வெளிநாட்டவர்களின் பயணங்கள் அதிகமாக இருந்தன. ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் மிக விரைவில் இரவு நேர சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.













# ‘பேரிடரை எதிர்கொள்ளல்; நல்லூரில் வெள்ளம்’ யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று கருத்தமர்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் ”பேரிடரை எதிர்கொள்ளல்: நல்லூரில் வெள்ளம்” என்ற தொனிப்பொருளில் அமைந்த கருத்தமர்வு நேற்று யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் திருமதி மைதிலி ரவீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் “பருவநிலை மாற்றமும் வெள்ளப் பெருக்கும்” என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா கருப்பொருளுரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் “மௌனம் கலைதல்” என்ற செயல் விளக்க நாடக ஆற்றுகையும் இடம்பெற்றது.

அத்துடன் பல்கலக்கழக கல்வியாளர்களும், துறைசார் நிபுணர்களும் கலந்துகொண்ட குழுநிலைக் கருத்தமர்வும் இடம்பெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் கணபதி கஜபதி, புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி ஏ.அன்ரனிராஜன், கலாநிதி பிரதீபா விபுலன், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வடக்குக்கான உதவிப் பொது முகாமையாளர் ஏந்திரி. ஏகாம்பரநாதன் ஜெகதீசன், யாழ். மாநகர சபையின் தலைமைப் பொறியியலாளர் ஏந்திரி இராசையா சுரேஷ்குமார், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஏந்திரி. குணராஜ் சுஜீவன் மற்றும் நல்லூர் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இராமலிங்கம் சிவகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
















# பத்தனை விபத்தில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் சென்ற பார ஊர்தி மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7.30.மணிக்கு திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவில் உள்ள பத்தனைச் சந்திப்பகுதியில் இடம் பெற்றுள்ளது என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தவை வருமாறு:-

நாத்தாண்டியப் பகுதியில் இருந்து நுவரெலியா பகுதியில் மரக்கறி ஏறிச் சென்ற பார ஊர்தி வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் பத்தனை சந்தியில் இருவர் மீது மோதியதில் அவர்கள் படுகாயமடைந்தனர். இருவரும் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் மரணம் அடைந்துள்ளார்.

நாவலப்பிட்டி பஸ் நிலையத்திற்கு உரித்தான பஸ்ஸில் வந்து பத்தனைச் சந்தியில் இறங்கியவர்கள் மீதே பார ஊர்தி மோதியுள்ளது.

இவ்வாறு விபத்தில் மரணித்தவர் வட்டவளை கரலீனா பகுதியை சேர்ந்த அப்துல் ராசீக் எனவும் அவரது உடலம் கொட்டகலை பிரதேச வைத்திய சாலையில் உள்ள சவ கிடங்கில் வைக்கபட்டு உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இவ்விபத்து குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பார ஊர்தியின் சாரதி கைது செய்யப்பட்டு உள்ளார்.

# ‘முத்திரை பதித்த யாழ் முஸ்லிம்கள்’ நூல் வெளியீடு ஜனவரி 18 கொழும்பில்

கலாபூஷணம் பரீட் இக்பால் எழுதிய ‘முத்திரை பதித்த யாழ் முஸ்லிம்கள்’ எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர் வரும்ஜனவரிமாதம்18ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை மாலை 3.45 மணிக்கு வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்தில் நடைபெறும்.

ஓய்வு பெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.எம்.மு/ஹதார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவரும் ‘உதயம்’ பத்திரிகை நிறுவனத்தின் தலைவரும் பிரதம ஆசிரியருமான அல்ஹாஜ் என். எம்.அமீன் கலந்து கொள்கிறார்.

தொழிலதிபரும்முஸான்இண்டநெஷனல் நிறுவனத்தின் தலைவருமான அல்ஹாஜ் முஸ்லிம் ஸலா/ஹத்தீன் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக பிரதி சமய விவகார, கலாசார அமைச்சர் அஷ்ஷேக் முனீர் முழப்பர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுத்தீன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நூலின் முதற்பிரதியை ஜெஸீமா பிக்ஸர் பலஸ் உரிமையாளரான அல்ஹாஜ் எம்.ஜி.எம்.ஜெமீல் பெற்றுக் கொள்வார்.




மேலும் கௌரவ அதிதிகளாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆர்.எம்.இமாம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஏ.ஆர்.ஏ.ஹபீஸ், ஷூரா கவுன்ஸில் செயலாளரும் சட்டத்தரணியுமான ரஷீத் எம். இம்தியாஸ், தொழிலதிபர் அல்ஹாஜ் எம்.ஏ.ஸி.மஹ்ஸூம், தொழிலதிபர் அல்ஹாஜ் டாக்டர் எம்.ஸி. பஹர்தீன் ஆகியோரும், சிறப்பு அதிதிகளாக அலி அஸீஸ், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் எம்.எஸ். றஹீம், யாழ் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் எஸ்.ஏ.ஸி. முபீன், இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றத் தலைவரும் ஒலிபரப்பாளருமான மனித நேயன் இர்ஷாத் ஏ.காதர், இலங்கை நெய்னார் சமூக நல காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

ஊடக அதிதிகளாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராசா, தினக்குரல் பிரதம ஆசிரியர் ஆர்.பி.ஹரன், விடிவெள்ளி பிரதம ஆசிரியர் எம்.பி.எம்.பைரூஸ், தமிழ்மிரர் பிரதம ஆசிரியர் ஏ. கனகராசா, முஸ்லிம் சேவை பிரதானி பாத்திமா றினூஸியா ஜஹ்பர், முகாமையாளர், செய்திப் பிரிவு வசந்தம் தொலைக்காட்சி, வசந்தம் எவ்.எம். ஸித்தீக் ஹனீபா, சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.கே.எம். அஸ்வர் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர், கலாபூஷணம் எம்.இஸட். அஹ்மத் முனவ்வர்-நூல் ஆய்வுரையும் ஓய்வு பெற்ற ஆசிரியரும் வானொலிக் கலைஞருமான ஏ.ஸி.நஜ்முத்தீன் சிறப்புரையும் நிகழ்த்துவார்கள்.

சிரேஷ்ட ஒலிபரப்பாளர் அஹ்மத் எம். நஸீர் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பார்.

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக முறையீடு

(விஜயரத்தினம் சரவணன்)



உலக வங்கியின் நிதி உதவியில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என மக்களால் தம்மிடம் முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அந்தத் திட்டம் தொடர்பான விவரங்களை வழங்குமாறு விவசாயத் திணைக்களத்திடம் அவர் கோரியுள்ளார்.

முல்லைத்தீவு – துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களிலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

உலகவங்கியின் நிதி உதவியில் விவசாய நவீநமயமாக்கல் திட்டம் கடந்த 2022ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாக அறிகின்றோம்.

இந்த விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தினூடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் மாதுளைச் செய்கையும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வாழைச்செய்கையும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பப்பாசி மற்றும் நிலக்கடலைச் செய்கையும், மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேசங்களில் பஷன்ஃப்ரூட் செய்கையும் மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் அறிகின்றோம்.

அந்தவகையில் வெளிநாட்டு ஏற்றுமதி நோக்கிலேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அறியமுடிவதுடன், இத்திட்டத்திற்கு ஒரு பயனாளிக்கு ஒருமில்லியன் ரூபா வரையான நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம்.

அத்தோடு ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பாரிய நிதிச்செலவில் இத்திட்டத்திற்கு கட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளமையுடன், பாரிய நிதிச்செலவில் இத்திட்டத்திற்கென உபகரணங்களும் பெறப்பட்டுள்ளன.

அத்தகையசூழலில் இவ்வாறு உலக வங்கியின் நிதி உதவியில் செயற்படுத்தப்பட்ட இந்த விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளன எனப் பலரும் என்னிடம் முறையீடு செய்துள்ளனர்.

குறிப்பாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்ட கரைதுறைப்பற்றின் கொக்குத்தொடுவாய் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் பழம்பாசிப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டேன்.

இந்நிலையில் கொக்குத்தொடுவாயில் இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் மாதுளைச் செய்கையிலும் பாரிய குளறுபடிகள் இருக்கின்றன என என்னிடம் பலரும் முறையிட்டனர். மக்களுக்கு உரிய வகையில் உள்ளீடுகள் வழங்கப்படவில்லை எனவும், இத்திட்டத்தின் பிரகாரம் அப்பகுதியில் இரு கட்டடங்கள் அமைக்கப்படவேண்டிய நிலையில் ஒரு கட்டடம் மாத்திரமே அமைக்கப்பட்டுள்ளதுடன், இருகட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளன என உரிய தரப்பினரின் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம். இந்த மாதுளைச் செய்கைத்திட்டம் செயற்பாடற்று தோல்வியடைந்த நிலையில் காணப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அதேவேளை பழம்பாசிப் பகுதியில் இத்திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்பட்ட பப்பாசி செய்கையிலும் முறைகேடுகள் உள்கன என அறியமுடிகின்றது. குறிப்பாக செய்கைக்காக வழங்கப்படுகின்ற விதைப் பைக்கட்டுக்களில் விதை தொடர்பான தெளிவான விவரங்கள் வழங்கப்படவில்லை. அத்தோடு பப்பாசித் திட்டத்திற்கென பாரிய நிதிச்செலவில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் பயன்பாடற்று சீரற்றநிலையில் காணப்படுகின்றமையுடன், பாரிய நிதிச்செலவில் கொள்முதல் செய்யப்பட்ட உபகரணங்கள் களஞ்சிய அறைகளில் மூடிவைக்கப்பட்டு பயன்பாடற்ற நிலையில் காணப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் மாந்தைகிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேசங்களில் இந்த விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் பேஷன்ஃப்ரூட் செய்கைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக அறிகின்றோம் அந்தத்திட்டம்தொடர்பிலான விவரங்களையும் அறிய விரும்புகின்றேன்.

மேலும் இந்த திட்டத்தின் முல்லைத்தீவு மாவட்டரீதியான விவரங்களையும் அறியவிரும்புகின்றேன்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் எத்தனை பயனாளிகள் உள்வாங்கப்பட்டனர்? இத்திட்டத்திற்கு மொத்தம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது? இத்திட்டத்தினால் பயனாளிகள் நன்மை அடைந்தார்களா? இத்திட்டத்தின் மூலம் செய்கைபண்ணப்பட்ட உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா? எவ்வளவு வருமானம் கிடைக்கின்றது? – என்கின்ற விவரங்களை அறிய விரும்புகின்றேன்.

ஏன் எனில் இந்த திட்டத்திற்கென உலகவங்கியினால் பாரிய அளவிலான நிதி ஒதுக்கீடு ஒன்று வழங்கப்பட்ட நிலையில், இத்திட்டத்தில் பாரிய ஊழல் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என என்னிடம் பலரும் முறையிட்டுள்ளனர்.

இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற சில இடங்களை நேரில் சென்று பார்த்த வரையில் எம்மாலும் அவ்வாறே அவதானிக்கமுடிகின்றது.

அவ்வாறு இந்த விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பின், இது தொடர்பில் ஜனாதிபதியிடம் தெரியப்படுத்த வேண்டும். அதன் மூலம் இதுதொடர்பான முறையான விசாரணைகளை மேற்கொண்டு, ஊழலில் ஈடுபட்டவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

எனவே இத்திட்டம் தொடர்பான சகல விவரங்களையும் தரவுகளையும் பெற்றுக் கொள்ள விரும்புகின்றேன். விவசாயத் திணைக்களத்திடம் இத்திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களையும், தரவுகளையும் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

இந்நிலையில் உதவி மாகாண விவசாயப் பணிப்பாளர் பதிலளிக்கையில் –

விவசாயத் திணைக்களம் இந்த விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை மாத்திரமே வழங்கியது. இது தவிர இந்தத் திட்டத்திற்கும் விவசாயத் திணைக்களத்திற்கும் வேறெந்தத் தொடர்புகளும் கிடையாது.

எனினும் இத்திட்டத்திற்கு எத்தனை பேர் உள்வாங்கப்பட்டனர் என்பது தொடர்பான விவரங்களையும், தற்போது எத்தனைபேர் இந்த செய்கைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது தொடர்பான விரங்களையும் எம்மால் தரமுடியுமெனத் தெரிவித்தார்.

# மன்னாரில் பண்டிகைக் கால வியாபாரத்துக்குக் கடைகள் ஏலம் இம்முறை 4 கோடி ரூபாவைத் தாண்டியது நகர சபை வருமானம்

## நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தெரிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர எல்லைக்குள் நத்தார், புதுவருடப் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகளுக்கு கடைகள் அமைக்க இடம் ஏல விற்பனை மூலம் வழங்கப் பட்ட நிலையில் நகர சபைக்கு சுமார் 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமா னம் கிடைக்க பெற்றுள்ளதாகவும், கடந்த காலங்களில் இவ்விடயத்தில் ஊழல் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ள மைக்கு இந்த வருமானம் ஓர் எடுத்துக் காட்டு என மன்னார் நகர சபையின் தவிசாளர் வசந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை காலை மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊடக சந் திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

மன்னார் நகர சபையினால் 2025 ஆம் ஆண்டுக்கான பண்டிகைக்கால வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ள ஏல விற்பனை மூலம் இடம் வழங்கப்பட்டது. மன்னார் நகர சபைப் பிரிவில் 339 தற்காலிக வியாபார நிலை யங்களை அமைக்க இடம் அடையாளம் காணப்பட்டது.

அதில் 284 கடைகள் வெள்ளிக் கிழமை மாலை வரை ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளன.அதன் ஊடாக மன்னார் நகரசபைக்கு 4 கோடியே 85 ஆயிரத்து 866 ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

மேலும் 55 கடைகள் ஏல விற்ப னைக்கு செல்ல உள்ளன. அதனூடாகவும் கணிசமான வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இந்தவருமானங் களை வைத்துக் கொண்டு மன்னார் நகர சபை பிரிவில் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த இந்த நிதி 2026 ஆம் ஆண்டு பாதீட்டில் பயன்படுத்தப்பட உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அனர்த்த



நிலை ஏற்பட்ட போது நகர சபைக்கு வருமான இழப்பு ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் கடந்த காலங் களை விட வெளிப்படை தன்மையுடன் ஏல விற்பனை இடம் பெற்றமையால் இம்முறை 4 கோட. ரூபாவுக்கும் மேற் பட்ட வருமானம் கிடைக்க பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் முந்தைய நிர் வாகங்களினால் எவ்வாறு ஊழல் இடம் பெற்றுள்ளது என்பதற்கு இது ஒரு முன் உதாரணமாக இருக்கிறது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகவும் குறைந்த அளவி லான வருமானமே மன்னார் நகர சபைக்கு கிடைக்கப்பெற்றது. பண்டிகைக் கால வியாபாரங்களை பாரிய அளவில் மன்னாரில் மேற்கொண்டு வரும் பல வியாபாரிகளிடம் நான் வாக்குமூலங் களை பெற்றுக் கொண்டுள்ளேன். அவர்களின் வாக்குமூலங்களை அடுத்த சபை அமர்வில் முன் வைக்க இருக்கி றேன்.

13 லட்சம் ரூபா பெறுமதியான கடையை அவர் 10 லட்சம் ரூபா கொடுத்து எடுத் துள்ளார். அதுவும் தனிப்பட்ட முறை யில். அவர் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை வர்த்தக நிலையத்தை நடத்தி யுள்ளார்.

என்னிடமும் அந்த வர்த்தகர் அவ்வா றான ஒரு நடவடிக்கையை முன்னெடுக்க முயற்சியை மேற்கொண்டார். எனினும் சட்ட முறைப்படி வர்த்தக நிலையத்தை பெற்றுக் கொள்ளவும், டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் வர்த்தக நிலையங்கள் அகற்றப்பட வேண்டும் என்ற அறிவுறுத்- தலைமையும் வழங்கியுள்ளேன்.

அந்த வர்த்தகர் பகிரங்க ஏலம் மூலம் 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு வர்த் தக நிலையத்தைப் பெற்றுள்ளார்.எனவே எதிர்வரும் காலங்களிலும் மன்னார் நகர சபை வெளிப்படை தன்மையுடன் செயல்படும். மன்னார் நகர சபை பிரிவில் எதிர் வரும் காலங்களில் சட்டவிரோத வியாபார நடவடிக்கைகள் எவையும் இடம்பெறா.

முறைக்கேடாக செயல்பட்ட கடந்த நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களுக் கென பெற்றுக் கொள்ளப்படும் நிதி மக்களுக்க. சரியாகச் செலவிடப்பட வேண் டும் என்பதே எமது நோக்கம்.

எனவே மக்களின் நிதியை கையா டல் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத் தப்பட்டு அவர்களுக்கான தண்டனை வழங்கப்பட வேண்டும். எனக்கெதிராக போலி முக நூல்களில் சிலர் வசை பாடி வருகிறார்கள். மக்களுக்கு சேவை செய்ய வந்த நான் இந்த அவதூறுகளுக்கு ஒரு போதும் அஞ்சப் போவதில்லை.

மக்களுக்கான சேவைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஊழல்வாதி களையும் அம்பலப்படுத்தி உள்ளேன். விரும்பினால் அவர்கள் பொலிஸ் நிலையம் அல்லது நீதிமன்றம் ஊடாக நீதியை பெற்றுக்கொள்ள முடியும். நான் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்த வில்லை. - என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் நகரசபை யின் உப தலைவர் மற்றும் நகர சபை உறுப்பினர் மைக்கல் கொலின் ஆகி யோரும் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது.

# கற்பிட்டிப் பிரதேச செயலகத்தின் அனர்த்த நிவாரணப் பணி முடக்கம்

## கிராம சேவையாளர்கள் பகிஷ்கரிப்பில்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் என சகலரும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சகல கடமைகளிலும் இருந்து தற்காலிக மாக விலகிக் கொள்கின்றனர் என இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் கற்பிட்டிக் கிளையும், அகில இலங்கை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் கற் பிட்டி கிளையும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

இதன் காரணமாக நேற்று சனிக் கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் எந்த ஒரு கிராம உத்தியோகத்தர் பிரி விலும் அரசினால் வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரண பொதிகள் மக்களுக்கு வழங்கப்படவில்லை. மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மண்டலக்குடா, கண்டக்குழி, திகழி , ஆன்டாங்கனி, ஆலங்குடா மற் றும் நிர்மல்புர ஆகிய கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தி யோகத்தர்கள் அச்சுறுத்தப்பட்டமை, அவர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, எதிர்ப்பு ஆர்ப்பாட் டங்கள் மேற்கொண்டமை மற்றும் ஆலங் குடாவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த முகாமைத்துவத்தின் சகல கடமைகளிலும் இருந்தும் தற்கா லிக விலகிக் கொள்ளவதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத் தின் கற்பிட்டி கிளையும், அகில இலங்கை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் கற்பிட்டி கிளையும் வெள்ளிக்கிழமை வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

மேலும் நான்கு கிராம உத்தியோ கத்தர்களும் ஒரு பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தரும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதி விட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.






# கிளிநொச்சியில் பால வேலை பூர்த்தி

(பூ.லின்ரன்)

பேரிடர் வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ 35 பிரதான வீதியில் 11 ஆம் மைக்கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

சேதமடைந்த பாலத்தை புனரமைக்கும் பணியில் இந்திய இராணுவம் மற்றும் இலங்கை இராணுவம், வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியன இணைந்து துரித கதியில் ஈடுபட்டன. புனரமைப்பு பணிகள் நேற்றைய தினம் நிறைவு பெற்றன.

நிறைவுப் பணியின் போது நேற்றைய தினம் இந்திய துணைத் தூதர் சாய் முரளி கலந்து கொண்டார். பாலத்தின் புணரமைப்பு பணிகளை அவர் பார்வையிட்டார்.

தற்பொழுது நிறைவு பெற்றுள்ள பாலம் இன்று அல்லது நாளை பொது மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட உள்ளது.

# புத்தளம் நான்காம் கட்டையில் பொது மக்கள் ஆர்ப்பாட்டம்



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

அரசாங்கத்தினால் வழங்கப்படும் வெள்ள அனர்த்த நிவாரண நிதியான 25,000 ரூபா வழங்கப்படாமல் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கொதித்தெழுந்த புத்தளம் மன்னார் வீதி சோல்ட்டன், மதீனா நகர், நான்காம் கட்டை பிரதேச மக்களினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பாதைகளை மறைத்து நடத்தப்பட்ட ஆர்பாட்டத்தினால் சிறு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பல நாள்களாகியும் இது வரையிலும் எந்த விதமான நிவாரணப் பொருள்களோ, அரச உதவிகளோ தமக்கு கிடைக்காதமைக்கும், இன்னும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணத் தொகையும் தமக்கு வழங்கப்படாமல் புறக்கணிப்பு செய்யப்பட்டமைக்கும் ஆட்சேபித்தே இந்தப் பிரதேச மக்கள் தங்களது எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

அங்கு விரைந்த புத்தளம் பிரதேச செயலாளருடன் பேச்சு நடத்தப்பட்டது. திங்கட் கிழமை முதல் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பிரதேச மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தன.







# பாதிக்கப்பட்ட மக்களின் நலன்புரி திட்டத்திற்காக வளவாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் உள சுகாதார மற்றும் நலன்புரி மேம்பாட்டுத் திட்டத்திற்காக வளவாளர்களைப் பயிற்றுவிக்கும் விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் திங்கள் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட உளவியலாளர்கள் உள்ளிட்ட நிபுணர்கள் குழுவினர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இந்த பாரிய வேலைத்திட்டத்திற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, கிராமிய அபிவிருத்தி அமைச்சு, சமூக பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன ஒன்றிணைந்து செயற்படவுள்ளன.

குறிப்பாக சிறுவர்கள், மகளிர் மற்றும் முதியவர்களை இலக்கு வைத்து இந்த உள சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களின் பின்னர் மக்கள் எதிர்கொள்ளும் மன ரீதியான சவால்களைக் கையாள்வதற்கும், அவர்களின் இயல்பு வாழ்க்கையை விரைவாகக் கட்டியெழுப்புவதற்கும் இந்தத் திட்டம் பெரும் பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி அநுர





இலங்கையில் அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் தொடர்ச்சியாக வழங்கி வரும் மனிதாபிமான உதவிகளுக்காக, அந்த நாட்டின் ஜனாதிபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நன்றி தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து ஜனாதிபதி ஷேக் முகமது , ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும் இலங்கை மக்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதில் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் மீண்டெழும் திறன் குறித்து அவர் தனது வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

உலகளவில் இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படும் சமூகங்களுக்கு சரியான நேரத்தில் ஆதரவை வழங்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் நீண்டகால மனிதாபிமானக் கொள்கையின் அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படுகின்றது.

இந்த மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி சுமையைக் குறைப்பதோடு, நீண்ட கால மீட்சி மற்றும் புனரமைப்பு முயற்சிகளுக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரவுக்கு அவசர கடிதம்

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை மற்றும் அதன் செயற்பாட்டுத் திறனை உறுதிப்படுத்தும் வகையில், அதற்குத் தேவையான போதிய நிதி மற்றும் மனித வளங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு நேற்று நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட இந்த கடிதத்தில், இந்த ஆணைக்குழு தற்போது எதிர்நோக்கி வரும் சவால்கள் குறித்து சட்டத்தரணிகள் சங்கம் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக கடுமையான ஊழியர் பற்றாக்குறை, போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமை,இத்தகைய குறைபாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை நேரடியாகப் பாதிப்பதுடன், அதன் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்குத் தடையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமை என்பது ஜனநாயகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் ஒரு அடிப்படை உரிமையாகும்.

அரசமைப்பின் 14 அ உறுப்புரையின் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த உரிமையைப் பாதுகாப்பதில் அந்த ஆணைக்குழு முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, அந்த ஆணைக்குழுவின் சுயாதீனமான செயல்பாடு நாட்டின் நலனுக்கு மிக முக்கியமானது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே , தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் குடிமக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் கொண்டு வரப்படக்கூடிய எந்தவொரு திருத்தத்தையும் சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாக எதிர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

அத்தகைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுடன் முறையான ஆலோசனைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் தகவல்களை வழங்குவதில் காட்டும் தயக்கங்கள் மற்றும் ஆணைக்குழுவின் நிதிச் சுதந்திரம் தொடர்பில் நிலவும் சிக்கல்களைத் தீர்ப்பது புதிய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என இந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் கட்டளை



பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புலோலிப் பகுதியில் 182 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பருத்தித்துறை நீதிமன்று கட்டளை வழங்கியுள்ளது.

நெல்லியடியில் உள்ள அரச புலனாய்வு சேவையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய கடந்த வியாழக் கிழமை பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி தெற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்று நெல்லியடிப் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது. இதன் போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 182 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் நெல்லியடி பொலிஸார் முற்படுத்தி தடுத்து வத்து விசாரணை செய்வதற்கான கட்டளையை கோரினர்.

இதை ஆராய்ந்த நீதிமன்று சந்தேக நபரை 23 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு கட்டளை வழங்கியுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்: மக்களின் கருத்து கோரப்பட்டுள்ளது



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பாக எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் வழங்குமாறு பொதுமக்களிடம் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய சட்டமூலம் குறித்து ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை விடுத்த அமைச்சர், தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் புதிய சட்டத்தைக் கொண்டு வருவோம் என தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்ததைச் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் 17 பேர் கொண்ட நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த நிபுணர் குழு கடந்த 11 மாதங்களாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில், மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை தன்னிடம் கையளித்துள்ளதாக அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

இது ஒரு நுணுக்கமான மற்றும் உணர்வுபூர்வமான சட்டமூலம் என்பதால், நேரடியாக அமைச்சரவைக்கோ அல்லது நாடாளுமன்றத்திற்கோ சமர்ப்பிப்பதற்கு முன்னர், மக்களின் கருத்துக்களைக் கேட்டு அவர்களை தெளிவுபடுத்த வேண்டும் என நாம் நம்புகிறோம் என அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார குறிப்பிட்டார்.

2026 பெப்ரவரி 28 வரை கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

இந்த சட்டமூலத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moj.gov.lk இல் பதிவேற்றப்பட்டுள்ளன.

இந்த சட்டமூலம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நீதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆவணம் இறுதிச் சட்டமூலம் அல்ல என்றும் சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் ஆலோசனைகளை அதே நிபுணர் குழு மீண்டும் பரிசீலிக்கும் என்றும் அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார உறுதியளித்தார்.

மேலும், இந்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதில் காவல்துறை மற்றும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினரின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் பொதுமக்கள் தமது ஆலோசனைகளை வழங்க முடியும் என்றும் அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கட்சியின் வங்கிக்கணக்கை முடக்குமாறு தயாசிறி கோரிக்கை




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வங்கிக் கணக்குகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மக்கள் வங்கியின் சுதுவெல்ல கிளையிடம் எழுத்துப்பூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளதாக அந்த கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டுகருத்துத் தெரிவித்த அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தேர்தல்கள் ஆணைக்குழு தற்போது அங்கீகரிக்கவில்லை என்றும், இதன் காரணமாகவே கட்சியின் வங்கி கணக்கை முடக்குமாறு கோரியதாக குறிப்பிட்டார்.

கட்சி தற்போது பல நீதிமன்ற வழக்குகளை எதிர்கொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், கடந்த சில வருடங்களாக எந்தவொரு தேர்தலிலும் கட்சிக்குத் தனித்துப் போட்டியிட முடியாமல் போயுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறே வழக்குகள் தொடர்ந்தால், கட்சி மக்களிடமிருந்து முற்றாக அந்நியப்பட்டுப் போகும் அபாயம் உள்ளதாக அவர் எச்சரித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தைப் பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள ஒருகுழுவினர், கட்சியின்நிதியைத்தவறாகப் பயன்படுத்தி வருவதாக அவர் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார்.

இது கட்சியின் சாதாரண உறுப்பினர்களுக்கு இழைக்கப்படும் பாரிய துரோகம் என்றும், நிதி விவகாரங்கள் குறித்து உறுப்பினர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கட்சியின் நிதியைச் சட்டவிரோதமான முறையில் கையாளுபவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கட்சியின் காசோலைகளில் கையொப்பமிட்டு சட்டவிரோதமாகப் பணத்தைப் பெறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையைச் செய்யும் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.



# பண்டிகை காலத்தில் காலி முகத்திடலில் பொதுமக்களுக்கு விசேட உதவி மையம்

பண்டிகை காலத்தை முன்னிட்டு காலி முகத்திடலில் பொது மக்களுக்கான விசேட உதவி மையம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இந்த பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று முதல் காலி முகத்திடலின், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இந்த உதவி மையம் ஸ்தாபிக்கப்பட்டவுள்ளது.

இந்த உதவி மையம், பொதுமக்களுக்கான அவசர நிலைமைகள் அல்லது எதிர்பாராத சூழ்நிலைகள் ஏற்படும் போது உடனடி உதவி, வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளுக்கு மேலதிகமாக, மருத்துவ அவசர நிலைமைகளை கையாளவும் தேவையான போது முதலுதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் நோயாளர் காவு வண்டி சேவைகள் மற்றும் அடிப்படை மருத்துவ உதவிகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் வசதிக்காக, பொதுமக்கள் உதவி மையம், அவசர ஒருங்கிணைப்பு, நோயாளர் காவு வண்டி சேவைகள் மற்றும் பாதுகாப்பு உதவிக்காக 071 859 5880 என்ற தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# டிஜிட்டல் மயமாக்கலுக்கு உலக வங்கி பெரும் உதவி




இலங்கையின் டிஜிட்டல் பரிமாற்றத் திட்டத்திற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க உலக வங்கி அங்கீகாரம் அளித்துள்ளது.

நாட்டின் டிஜிட்டல் துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதோடு, நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல், அரசாங்கத்தின் நிர்வாக நடைமுறைகளை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம், அரச சேவைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுதல், பொதுமக்களுக்கான அரச சேவைகளை அவர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறும், மக்களின் தேவைகளுக்கு விரைவாகப் பதிலளிக்கக் கூடியவாறும் மாற்றியமைத்தல் போன்றவற்றை நோக்காக கொண்டு அந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்கல் ஊடாகப் பலப்படுத்துவதற்கு இந்த நிதிப் பங்களிப்பு ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.



# தென்னிந்தியாவில் பா.ஜ.க. வளர்கிறது

## தேசிய செயல் தலைவர் நிதின் நிபின் தெரிவிப்பு

தென்னிந்தியாவில் பா.ஜ.க. வலிமையாக வளர்ந்து வருகிறது என்று அக்கட்சியின் தேசிய செயல் தலைவர் நிதின் நிபின் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய பா.ஜ.க. தேசிய செயல் தலைவராக நிதின் நபின் சமீபத்தில் நியமிக்கப்பட்டார். அதன் பிறகு முதல் முறையாகவும், கட்சியின் முதல் நிகழ்வாகவும் புதுச்சேரி பயணத்தை அவர் வகுத்திருந்தார். இதையொட்டி அவர் இரண்டு நாள் பயணமாக புதுச்சேரிக்கு நேற்று பிற்பகல் வருகை தந்தார். அவருடன் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா உடனிருந்தார்.

புதுச்சேரி எல்லையான கோரிமேடு பகுதியில் அவருக்குக் கட்சியினர் மேள தாளத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.புதுச்சேரிமாநிலதலைவர்வி.பி.ராமலிங்கம், பா.ஜ.க. புதுச்சேரி மேலிடப் பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா, அமைச்சர் நமச்சிவாயம் மற்றும் எம்எல் ஏக்கள், நிர்வாகிகள் சால்வை அனைத்தும் பூங்கொத்து கொடுத்தோம் வரவேற்றனர்.

பின்னர் புதுச்சேரி நகரப் பகுதிக்கு மோட்டார் சைக்கிள், காரில் தொண்டர்கள் சூழ செயல் தலைவர் நிதின் நிபின் அழைத்து வரப்பட்டார். பாரதி பூங்கா அருகில் உள்ள பாரதியார் சிலைக்கு மாலை அணிவிக்க வந்தார்.

அங்கு பாரதியார் வேடம் அணிந்திருந்த சிறுவர்கள் அவரை வரவேற்றனர். தொடர்ந்து பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அங்கிருந்து சட்டப்பேரவைக்கு எதிரேயுள்ள டாக்டர் அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. செயல் தலைவர் நிதின் நிபின், "தென் மாநிலங்களில் பா.ஜ.க. வலிமையாக வளர்ந்து வருகிறது." என்று தெரிவித்துள்ளார்.

# அசாமில் யானைகள் கூட்டம் ரயிலுடன் மோதி கோர விபத்து



அசாமின் ஹோஜாய் மாவட்டத்தில் நேற்று அதிகாலை சாய்ராங் – புது டெல்லி இடையிலான பயணத்தை மேற்கொள்ளும் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலுடன் யானைகள் கூட்டமொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த கோர விபத்தில் 8 காட்டு யானைகள் உயிரிழந்தன எனவும் ஒரு யானை காயமடைந்ததாகவும் இந்திய வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், இந்த விபத்தில் குறித்த ரயிலின் 5 பெட்டிகளும் இயந்திரமும் தடம் புரண்டன, எனினும், அதில் பயணித்த பயணிகளுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்று வடகிழக்கு எல்லைப்புற ரயில்வே செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

புது டில்லி செல்லும் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் நேற்று அதிகாலை 2.17 மணியளவில் ஹோஜாய் மாவட்டத்தின் சாங்ஜ்ராய் பகுதியில் யானைகளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் உறுதிபடுத்தியுள்ளனர்.

இதனால், குறித்த மார்க்கமூடான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதுடன், பல ரயில்கள் மாற்றுப் பாதைகளுக்கு திருப்பி விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.






# பங்களாதேஷ் நாடாளுமன்றத்தை கைப்பற்ற போராட்டக்காரர்கள் முயன்றதால் பதற்றம்!

பங்களாதேஷில் கொலை செய்யப்பட்ட இளைஞர் அமைப்பின் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாடி இறுதிச் சடங்கில் இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் பங்கேற்றார். நாடாளுமன்றத்தைக் கைப்பற்ற போராட்டக்காரர்கள் முயற்சி செய்ததால் பதற்றம் ஏற்பட்டது. நாடாளுமன்றம், அனைத்து அரசு அலுவலகங்களிலும் இராணுவம், பொலிஸ் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷில் கடந்த ஆண்டு அரசுக்கு எதிரான மாணவர் அமைப்புகளின் போராட்டத்தை தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதையடுத்து பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அங்கு செயல்பட்டு வருகிறது. இதனிடையே, பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிட டாக்கா 8 ஆவது தொகுதியில் ஷெரீப் உஸ்மான் ஹாடி என்ற மாணவர் தலைவர் களமிறங்கினார். கடந்த 12ஆம் திகதி இவர் டாக்காவில் பிரச்சாரம் தொடங்கினார். பின்னர் சைக்கிள் ரிக் ஷாவில் செல்லும் போது, பைக்கில் பின்தொடர்ந்து வந்த முகமூடி அணிந்த மர்ம நபர்கள் ஹாடியை தலையில் சுட்டுவிட்டு தப்பினர். உடனடியாக டாக்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஹாடி, மேல் சிகிச்சைக்காக சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனின்றி 3 நாட்களுக்கு முன்பு ஹாடி உயிரிழந்தார். இந்த தகவல் பரவியதும் நேற்று முன்தினம் பங்களாதேஷில் பெரும் கலவரம், வன்முறை சம்பவங்கள் நடந்தன. இதை யடுத்து பதற்றம் உள்ள இடங்களில் பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு உள்ளனர்.

இதனிடையே, மைமென்சிங் நகரில் ஜவுளி தொழிற்சாலையில் பணியாற்றி வந்த தீபு சந்திர தாஸ் (வயது 27) என்ற இளைஞர், முஸ்லிம் மதத்தை பற்றி அவதூறாகபேசியதாககூறிஒருகும்பல்நேற்று முன்தினம் அவரை சுற்றி வளைத்து கொடூரமாகத் தாக்கியது. இந்தத் தாக்குதலில் அவர் உயிரிழந்தார். பின்னர் அந்த கும்பல் தீபு சந்திர தாஸின் உடலை மரத்தில் கட்டி தொங்கவிட்டு தீ வைத்து எரித்தது. இதனால் வங்கதேசத்தில் இந்துக்கள் உட்பட சிறுபான்மையினர் இடையேபீதிஏற்பட்டது. இதைத்தொடர்ந்து பொலிஸார் முக்கிய இடங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்தி கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்து வருகின்றனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட ஷெரீப் உஸ்மான் ஹாடியின் உடல் சிங்கப்பூரில் இருந்து நேற்றிரவு டாக்கா கொண்டு வரப்பட்டது. இதையடுத்து அவரது இறுதி ஊர்வலம் நேற்று பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நடைபெற்றது. மேலும் ஹாடியின் மறைவையொட்டி ஒரு நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இந்த ஊர்வலத்தில் இடைக்கால அரசுத் தலைவர் முகமது யூனுஸ் பங்கேற்றார். மேலும், இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஹாடியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் டாக்கா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பங்களாதேஷின் தேசிய கவிஞர் காஸி நஸ்ருல் இஸ்லாமின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது.

இதற்கிடையில், பங்களாதேஷில் தொடர்ந்து போராட்டம், பேரணி, வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்று மாலை பங்களாதேஷ் நாடாளுமன்ற வளாகம் முன்பு குவிந்த ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். பின்னர் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளே நுழைய முயற்சித்தனர். நாடாளுமன்றத்தைக் கைப்பற்ற முயன்றதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இராணுவ வீரர்கள், பொலிஸார் அவர்களை தடுத்து விரட்டியடித்தனர். தலைநகரில் பதற்றம் நிலவுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நாடாளுமன்றம், அனைத்து அரசு அலுவலகங்களிலும் இராணுவத் தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு உள்ளனர்.

# எப்ஸ்டீன் ஆவணங்களில் ட்ரம்ப் தொடர்பான தகவல்

## வெள்ளை மாளிகையின் விளக்கம்




பாலியல் குற்றவாளி ஜெப்ரி எப்ஸ்டீன், தனது "மார்-ஏ-லாகோ" இல்லத்தில் வைத்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு 14 வயது சிறுமி ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார் என நீதிமன்ற ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து வெள்ளை மாளிகை தற்போது அதிகாரப்பூர்வ விளக்கமொன்றை அளித்துள்ளது.

அமெரிக்கநீதித்திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்ட ஆவணங்களின்படி, 1990-களில் நடைபெற்ற ஒரு சந்திப்பின் போது, எப்ஸ்டீன் ட்ரம்ப்பைத் தட்டி அந்தச் சிறுமியைக் காண்பித்து, "இது ஒரு நல்ல தேர்வு, சரிதானே?" என்று விளையாட்டாகக் கேட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் குறித்து பிபிசி செய்தி நிறுவனத்திற்கு வெள்ளை மாளிகை ஊடகப் பேச்சாளர் அபிகாயில் ஜெக்சன் விடுத்துள்ள அறிக்கையில்,

"வரலாற்றிலேயே மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படும் நிர்வாகமாக ட்ரம்ப் நிர்வாகம் செயற்படுகிறது. ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட ஆவணங்களை வெளியிட்டும், பிரதிநிதிகள் சபையின் மேற்பார்வைக் குழுவின் கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் நாங்கள் எங்களது நேர்மையை நிரூபித்துள்ளோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எப்ஸ்டீனின் ஜனநாயகக் கட்சி நண்பர்கள் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கோரிக்கை விடுத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனநாயகக் கட்சியினரை விடவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ட்ரம்ப் நிர்வாகமே அதிக உதவிகளைச் செய்துள்ளது என்றும் அவர் வாதிட்டார்.

கடந்த காலங்களில் எப்ஸ்டீனுடன் தான் நண்பராக இருந்ததை ட்ரம்ப் ஏற்றுக்கொண்டாலும், 2004-ஆம் ஆண்டிலேயே அவருடனான உறவைத் துண்டித்துவிட்டதாகக் கூறி வருகிறார்.

எப்ஸ்டீன் தொடர்பான எந்தவொரு சட்டவிரோதச் செயல்களிலும் தனக்குப் பங்கில்லை என்பதையும் டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து மறுத்து வருகின்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.12.2025




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.12.2025




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

# வவுனியா மாநகர சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டிருக்கும் வியாபார நிலையம்




**(வவுனியா நிருபர்)**

வவுனியா நகரப்பகுதியில் மாநகர சபையின் அனுமதியின்றி வியாபார நிலைய ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச காணியில் முறையான அனுமதியின்றி சிறிதாக அமைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையம் ஒன்றைப் பெரிதாக கட்டும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இதனை அகற்றுவதற்கு மாநகரசபையினர் முற்பட்ட போதும் சட்ட ரீதியான சரியான முன்னாயத்த நடவடிக்கையைச் செய்ய தவறியதன் காரணமாக அதனை அகற்ற முடியவில்லை.

இந்நிலையில் மாநகரசபையினால் இந்த அபிவிருத்தியை மேலும் மேற்கொள்ளாமல் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாபார நிலையத்தின் கூரை தகடுகள் முழுமையாக அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, மாநகர சபை ஆணையாளர், மே.சாந்தசீலனிடம் கேட்ட போது –

இந்த வியாபார நிலையத்திற்கு எதுவித அனுமதியும் எங்களால் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக நேற்று முன்தினம் வர்த்தக சங்கத்தினாலும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்தத் தரப்பினர் பள்ளி வாசலின் குத்தகைப் பத்திரத்தை எமக்குச் சமர்ப்பித்து ஒரு விண்ணப்ப படிவத்தை எமக்குத் தந்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச செயலாளரிடம் கேட்டபோது அந்த குத்தகை இருப்பதாகத் தெரிவித்த போதும் அதனை இதுவரை பார்வையிடவில்லை.

மேலும் இந்த அனுமதியற்ற வியாபார நிலையத்திற்கான நடவடிக்கையைக் கட்டாயம் எடுப்போம். – எனவும் தெரிவித்தார்.